RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1997

# திருக்குறளில் அறச்சிந்தனைகள்

**வை. இரமேஷ் [அ, *]**

[அ] தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம், திருச்செங்கோடு, நாமக்கல்-637205, தமிழ்நாடு, இந்தியா

# Ethical thoughts in Thirukkural

**V. Ramesh [a, *]**

[a] Department of Tamil, Vivekanandha College of Arts and Sciences for Womens (Autonomous), Elayampalayam, Tiruchengode, Namakkal-637205, Tamil Nadu, India

* Corresponding Author: 23sharvesh@gmail.com

Received: 13-09-2022
Revised: 30-10-2022
Accepted: 06-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

One of Tamil literature's but ethical works is Thirukkural it has been translated into several languages including English, French etc. In the US white house, a couplet from this book is recited every day. These couplets are intertwined with people's daily lives. Couplets of this book depicts human Civilization briefly. The messages that are portrayed in this work is perpetual love, values, joy, politics, worship, compassion and many other variables play a vital past in human lives. This essay aims to highlight those inevitable elements that are depicted in the great Thirukkural.

**Keywords:** Thiruvalluvar, Virtue, Domesticity, Love, Truth

## முன்னுரை

உலகில் உள்ள தலைசிறந்த நூலாகத் திருக்குறள் போற்றப்படுகிறது. உலக மொழிகளில் பலவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதுப்போல் இன்றும் அமெரிக்க வெள்ளை மாளிகையில் தினமும், ஒரு குறள் வாசிக்கப்படுகிறது. இந்நூல் மக்கள் வாழ்க்கையோடு ஒன்றி இருக்கிறது. என்று கூறுகிறார். ஒவ்வொரு குறளும் மனித் சமுதாயத்தின் நாகரிகத்தை கூறுகின்றது. எக்காலத்திலும் ஏற்றுக்கொண்டு வாழும், கருத்துக்களை கூறுவதால், இன்றும், என்றும் காலத்தையும் இயற்கையையும் வென்று வாழ்ந்து வருகின்றது. அன்பும், வீரமும், இன்பமும், அரசியலும், புகழும், ஈகையும், அல்லாத மனித வாழ்வு என்றுமே கிடையாது. இத்தகையை அறச் சிந்தனைகளை வெளிக் கொண்டு வருவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அறம் விளக்கம்

அறம் என்ற சொல்லை இரண்டாகப் பிரிக்கலாம். அவை, தனி மனித அறம், சமூக அறம் என்பதாகும். அறம் என்பது விருந்தோம்பல், கொடை மற்றவர்க்கு உதவுதல், பிறர்க்கு தீங்கு விளைவிக்காமல் இருத்தல் போன்ற பல்வேறு செயல்பாடுகளைக் கூறலாம். அறம் எனும் சொல்லுக்கு கடமை, கற்பு, புண்ணியம், தர்மம், நல்வினை என அகராதி பல பொருளைத் தருகின்றது.

தமிழில் அறம் என்ற சொல் தோன்றுவதற்கு முன்பு பழமொழி, முதுமொழி, மூதுரை, வாயுறை வாழ்த்து, நன்று, நன்றி, நன்மை, முறைமை, நயம், நன்னெறி, ஒழுக்கம், கடமை போன்ற சொற்கள்

கையாளப்பட்டு வந்துள்ளன. இவ்வாறு அறம் என்ற சொல் மிகவும் பழைமையான நூல்களிலும் சொல்லப்பட்டு வந்துள்ளன என்பது பற்றி நாம் உணரலாம்.

## அன்பின் சிந்தனை

சமுதாயம் முன்னேற வேண்டுமானால் மனிதனிடம் உள்ள தீய குணங்கள் நீங்கி பிற உயிர்களிடத்தில் அன்பு ஊட்ட வேண்டும். அன்புதான் மனிதனை மனிதனாக்கும். அன்பு வழியைப் பின்பற்றினால் நாம் எத்தகைய துன்பத்தையும் வென்றிடலாம். அத்தகையை அன்பில்லாத ஒருவனை வள்ளுவர், எலும்புக் கூட்டின் மீது தோல் போர்த்தப்பட்ட வெற்று உடம்பு என்கிறார். இதனை,

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதில்லார்க்கு

என்புதோல் போர்த்திய உடம்பு"

என்ற குறளின் மூலம் அறியலாம் (Kumaravel, 2005). இக்குறலுக்குச் சான்றாக, சிலப்பதிகாரத்தின் பாண்டியன் மன்னன் தனது தவறை உணர்ந்து,

"யானே அரசன் யானே கள்வன்

மன்பதை காக்கும் தென்புலம் காவல்"

என்று கூறி அவர் உயிர் துறக்க அவன் மனைவியும் உடன் மாண்டு போனாள். அன்பின் வழியது உயிர் நிலை என்ற உயரிய எல்லையை உணரலாம் (Manikkavasagan, 2008).

## விருந்தோம்பல் சிந்தனை

திருக்குறளில் விருந்தோம்பல் பற்றி கூறுவதற்கு வள்ளுவர் விருந்தோம்பல் என்ற அதிகாரத்தை படைத்துள்ளார். அதிகாரத்தின் மூலம் விருந்து பற்றியும் விருந்து அளிக்கக் கூடிய மக்களின் பண்புகளைப் பற்றியும் எடுத்துரைக்கின்றார்.

"விருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்ற குறளின் மூலம் இல்வாழ்க்கையில் ஈடுபடக் கூடியவர்களின் பொருளைச் சேமித்து மடடும் அல்லாமல் விருந்தினருக்கு விருந்து அளிக்கவேணடும் என்ற கருத்தை மக்களுக்கு எடுத்துக் கூறுகின்றார் (Kumaravel, 2005).

வீட்டிற்கு வரும் விருந்தினரை இன்முகத்துடன் உபசரித்து அவர்களுக்கு விருந்தளிக்க வேண்டும். விருந்து அளிக்கும் போது நம்முகம் சிறிதேனும் வாடி இருந்தால் விருந்தினர்களின் முகமும் வாடும் என்பதை,

"மோப்பக் குழையும் அணிச்சம் முகம்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து"

என்ற குறளின் வழி வள்ளுவர், அணிச்ச மலர் முகர்ந்தாலே வாடிவிடும். அதுபோல் நம் முகத்தில் சிறிது மாற்றம் ஏற்பட்டாலே விருந்தினரின் முகமும் வாடும். என்ற கருத்தினை எடுத்துரைக்கின்றார் (Kumaravel, 2005).

இக்கருத்தையே திருமூலர் அவர்களும்,

"ஆர்க்கும் இடுமீன் அவரிவர் என்ன்மின்

பார்த்திருந்துண்மின் பழம் பொருள் போற்றமின்

வேட்கை யுடையிர் விரைந் தொல்லை உண்ணன் மின்

காக்கை கரைந்ததுண்ணும் ஜலம் அறிமீனே” (Puliyur Kesigan, 2010)

மனிதர்களிடையே உற்றார், உறவினர், வேற்றார் என்று எந்தவித பாகுபாடும் எண்ணாமல் உணவை அனைவருக்கும் கொடுத்து உதவுங்கள் சாப்பிடுவதற்கும் முன்பு பசியோடு யாராவது வருகின்றார்களா என்று பார்த்துவிட்டு பிறகு சாப்பிடுங்கள். உணவின் மேல் அதிக ஆசை கொள்ளாமல், காக்கை பசியோடு இருக்கும் போதும் கரைந்து கூப்பிட்டு மற்ற காகங்கள் வந்தபின் ஒன்றாக உண்பதைக் கண்டு நாம் மனிதர்கள் அடுத்தவர்களுக்கும் உணவை கொடுத்து சாப்பிட வேண்டும் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். திருமூலர் திருமந்திரத்தில் கூறி இருக்கிறார். இக்கருத்தையே ஐம்பெருங்காப்பிங்களில் ஒன்றான மணிமேகலை இக்கருத்தை பின்வரும் பாடல் மூலம் விளக்குகின்றது.

“மண்திணி ஞாலத்து வாழ்லோர்க்கு எல்லாம்

உண்டி கொடுத்தார் உயிர் கொடுத்தோரே”

இந்த உலகத்தில் வாழும் மக்களுக்கு அவர்களின் பசியை அறிந்து உணவு வழங்க வேண்டும் என்று கூறுகின்றது. மேலும் வள்ளுவரின் வாழ்வியல் கருத்துக்களை நம் சங்கப்பாடலான புறநானூற்றில்,

“உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்

அமிழ்தம் இயைவ தாயினும் இனிது எனத்

தம்மியர் உண்டதும் இலரே முனிவிலர்”

சங்க மக்கள் அமிழ்தம் ஆயினும் தனித்து உண்ணமாட்டார்கள், மற்றவர்களுக்கும் கொடுத்து உண்பார்கள் என இப்பாடல் விளக்குகிறது (Puliyur Kesigan, 2008).

## கல்விச் சிந்தனை

கல்வி இன்றைய வாழ்விற்கு அவசியமான ஒன்றாகும். ஆதலால் அனைவரும் கல்வி கற்க வேண்டும். கற்கும் நூல்களையும் குற்றமறக் கற்க வேண்டும். அவ்வாறு கற்ற பிறகு அதனை தன் வாழ்வியலில் கடைபிடிக்க வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

“கற்க கசடறக் கற்றவை கற்றபின்

நிற்க அதற்குத் தக” (Kumaravel, 2005).

இக்கருத்தையே பாரதியார்,

“அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்

ஆரியம் பதினாயிரம் காட்டல்

பின்னருள்ள தருமங்கள் யாவும்

பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்

அன்னயாவிலும் புண்ணியம் கோடி

ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்”

என்றான் பாரதி. கோவில் கட்டுதல் அன்னதானம் செய்தல், உள்ளிட்ட எல்லா தர்மங்களைவிட புண்ணியம் தருவது ஒரு ஏழைக்கு கல்விக் கண் திறப்பதே சிறந்த அறமாக திகழும் என்றார்.

இக்கருத்தையே நாலடியாரில்,

குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்

மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து

நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்

கல்வி அழகே அழகு"

உடம்பில் உள்ள அழகு எல்லாம் அழகல்ல, ஒரு மனிதனுக்கு கல்வி அழகே அழகு என்று கூறுகிறது நாலடியார்.

## ஈகையும் கருணையும்

மனித வாழ்வில் ஈகை என்பது மனித இனம் தோன்றியது முதல் இன்று கடைபிடிக்கப்படும் தனி அறம் என்றே கூறலாம். ஈகைப் பண்பு இல்லையெனில் வறுமை என்ற பாவி நாட்டு மக்களின் வயிற்றுள் புகுந்து அவர்களை உயிரற்ற ஜடமாக்கிவிடும் என்ற உண்மையை,

"இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்

இன்மையே இன்னா தது"

என்ற குறளில் பதிவு செய்கிறார் (Kumaravel, 2005). எனவே வறுமை என்ற கொடிய துன்பம் மிகவும் கொடியது இதனைப் போக்க வேண்டும் எனில் ஈகை குணம் உடையவர்களாக மக்கள் வாழ வேண்டும். இது வறுமையை மட்டும் போக்குவதுடன் அறச்சிந்தனையையும் வளர்க்கின்றது. புகழையும் தருகிறது. என்பது உள்ளிட்ட கருத்துக்களையும் பெற முடிகின்றது. மேலும் இதனையே ஔவையாரும்,

"கொடியது கேட்கின் நெடிவெல் வேலோய்!

கொடிது கொடிது வறுமை கொடிது

அதனினும் கொடிது இளமையில் வறுமை

அதனினும் கொடிது ஆற்றொணாக் தொழுநோய்

அதனினும் கொடிது அன்பிலாய் பெண்டிர்

அதனினும் கொடிது

இன்புற அவர்கையில் உண்பது தானே"

என்ற தனிப்பாடல் பதிவு செய்யக் காணலாம் (Chidambara Mudaliar, 1940). அதாவது கொடியது வறுமையே அதிலும், இளமையில் வறுமை அதனினும் கொடிது அன்பு இல்லாத பெண்கள் அதனைக் காட்டிலும் கொடிது அவர் கையால் இன்புற உண்பது என்ற பாடலில் வறுமையின் உச்சக் கட்டத் திறனைத் தொட்டுக் காட்டியுள்ளார்.

## உயிர் கொல்லாமை

எந்த ஒரு உயிரையும் கொலை செய்யாது புலால் உண்ணாது வாழ்ந்து வருபவர்களை இந்த உலகில் எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும் என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி

எல்லா உயிரும் தொழும்"

என்ற குறள் புலால் மறுத்தலை வலியுறுத்துகிறது (Kumaravel, 2005). நெய் முதலிய பொருள்களை வேள்வியில் ஊற்றி செய்யும் யாகத்தால் விளையக் கூடிய நன்மைவிட அதிகமான நன்மை ஒரு உயிரைக் கொள்ளாது இருப்பதின் மூலம் விளைகிறது. என்ற கருத்தை வலியுறுத்துகிறது. இக்கருத்தை சிறுபஞ்ச மூலம் பின்வருமாறு கூறுகின்றது.

"கொல்லாமை நன்று கொலைத் தீது எழுத்தினைக்

கல்லாமை தீக் கதம் தீது: நல்லார்

மொழியாமை முன்னே முழுவதும் கிளைஞர்

பழியாமை பல்லார் பதி"

ஓர் உயிரைக் கொல்லாமை, ஒன்று கொலை தீது எழுத்தினைக் கல்லாமை, தீது பிறறை வெகுளல், தீது அறிவுடையார் தமக்கு மொழிவதற்கு முன்னேயும் பழியாத வழியொழுகுவான் பலர்க்கு நிறைந்தவன் ஆவான் (Aravanan, 2010).

## முடிவுரை

நம் சமூகத்தில் அறப்பண்புகள் வளரவேண்டுமெனில், அன்பு, அறம், விருந்தோம்பல், கல்வி, ஈகை, கருணை, உயிர்கொல்லாமை முதலிய பண்புகளை கடைப்பிடிக்க வேண்டும். இத்தகையை அறப்பண்புகள் திருக்குறளில்தான் எளிமையாக உணரத்தப்பட்டுள்ளது. திருக்குறளில் அறச்சிந்தனைகளை ஆராய்ந்தால் கடலைப்போல நீண்டுகொண்டே செல்லும் அளவிற்கு உள்ளன. எனவே இச்சமூகம் சிறப்பாக அமைவதற்கு வழி முறைகளை உணர்த்தும் விதமாக திருக்குறள் அறநெறிக் கருத்துக்கள் நிறைந்த நீதி இலக்கிய நூலாகவும் ஒப்பற்ற மணி மகுடமாகவும் விளங்குகின்றது. மேலும் அனைத்து சமயத்தினருக்கும் எந்நாட்டவருக்கும்; பொருந்தும் விதத்தில் அறக்கருத்துக்கள் அமைந்துள்ளன என்பது இந்நூலின் தனிச்சிறப்பாகும்.

## References


Aravanan, K.P. (2010) Sirupanchamoolam, Uma Pathippagam, Chennai, India

Chidambara Mudaliar, (1940) Avvaiyar Thani Paadal Thirattu, T. K. Chidambaranatha Mudaliar Viddya Natnakaram Press, Chennai, India

Kumaravel, P. (2005) Thirukkural, Manivasagar Pathippagam, Chennai

Manikkavasagan, N (2008) Silappathikaram Thelivurai, Uma Pathippagam, Chennai, India

Puliyur Kesigan, (2008) Purananuru, The South India Saiva Siddhanta Works Publishing Society Ltd., Chennai, India

Puliyur Kesigan, (2010) Thirumanthiram Moolamum Uraiyum, Ramaiya Pathippagam, Chennai



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License